மகளிர் உரிமைத் தொகை – கலைஞர் கனவு இல்லம் – புதுமைப் பெண் – தமிழ்ப் புதல்வன் – விடியல் பயணம் – என பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தியதற்குப் பிறகும் கூட – நாம் இன்றைக்கு

வருவாய் பற்றாக்குறையை ரூ. 68 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.41 ஆயிரம் கோடியாக குறைத்திருக்கிறோம்!

சட்டப்பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை..

முதல் பக்கத் தொடர்ச்சி

நம்முடைய தமிழ்நாடு அரசு இன்றைக்கு அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும், ஒன்றிய அரசு அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் தொடக்கத்தில் மாமன்ற உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் நன்றாக அறிவார்கள்.

சீர்தூக்கும் துலாக்கோல்

ஒன்றிய அரசினுடைய நிதிநிலை நீங்கள் அனைவரும் அறிந்தவண்ணம் இந்தியாவினுடைய ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமான நிதிநிலை அறிக்கையாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. குறிப்பாக, உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு மாத்திரமான ஒரு நிதிநிலை அறிக்கையாக ஒன்றிய அரசினுடைய நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நம்முடைய மாநில அரசு இன்றைக்கு அளித்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கை என்பது தமிழ்நாட்டினுடைய கடைக்கோடி மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய நோக்கில் அமைந்திருக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் காலத்தில் ஒருவேளை எங்களுக்கு ஆதரவாக இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தாலும்கூட, எப்படி புவியிலே வாழக்கூடிய மக்களுக்கு நிறம் பார்த்து வேறுபாடு இல்லாமல் வான் மழையானது அத்தனை பேருக்கும் சமமாகப் பொழிகிறதோ, அதைப்போல, முதலமைச்சர் அவர்கள் சமன்செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் அனைத்துப் பகுதிகளையும் சமமாகப் பாவித்து, தமிழ்நாட்டினுடைய எல்லாப் பகுதிகளுக்கும் தேவையான உரிய வளர்ச்சித் திட்டங்களை அறிவிக்க எங்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என்பதை நான் நெஞ்சுயர்த்திப் பெருமையாக இந்த மாமன்றத்திலே நான் தெரிவிப்பேன். அதன் காரணமாகவே இந்த நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு அனைவரும் பாராட்டக்கூடிய ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்.

இன்னொன்று, நம்முடைய உயிரினும் மேலான தமிழ்மொழியைவிட வடமொழிக்கும், இந்தி ஆகிய மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளக்கூடிய ஒன்றிய அரசு ஒருபுறம் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாடு அரசு பழங்குடி மக்கள் பேசக்கூடிய அந்தப் பழங்குடி மொழிகளுக்கும் உரிய கவனம் கொடுக்கக்கூடிய ஓர் அரசாக இன்றைக்கு நாம் பரிணமித்து வந்திருக்கிறோம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் உங்களால் கவனித்துப் பார்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

சொந்த நிதி ஆதாரங்கள்!

அதேபோல போக்குவரத்துத் துறையை நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், ஒன்றிய அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு இரயில்வே திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி 19 ஆயிரத்து 68 கோடி ரூபாய் மட்டும்தான்; ஆனால், உத்தரப் பிரதேசத்திற்கு 2025--2026 இந்த ஓராண்டிற்கு மட்டும் நம்முடைய ஒன்றிய அரசு ஒதுக்குவதற்கு உத்தேசித்திருக்கக்கூடிய தொகை அதே 19 ஆயிரத்து 858 கோடி ரூபாய்; அதாவது நமக்கு மூன்று ஆண்டுகளிலே கொடுக்கக்கூடிய அந்தத் தொகையை ஒரே ஆண்டிலே உத்தரப் பிரதேசத்திற்கு ஒன்றிய அரசு வழங்குகிறது என்று சொன்னால், ஒன்றிய அரசினுடைய நிதிநிலை அறிக்கைக்கும், நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும் இருக்கக்கூடிய வேறுபாட்டை உங்களால் மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

இப்படி நாம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வந்தாலும்கூட இந்தியாவிலே மிக அதிகமான மதிப்பீட்டிலான சென்னை இரண்டாம் கட்ட Metro Rail திட்டத்தை ஒன்றிய அரசினுடைய நிதி உதவியின்றி, தன்னுடைய சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழ்நாடு செயல்படுத்த ஆரம்பித்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, அவர்கள் வற்புறுத்திய பின்னர்தான், ஒன்றிய அரசு தனது பங்கினை தமிழ்நாட்டிற்கு வழங்கியது என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதுமட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறை வளர்ச்சிக்காக மித அதிவேக இரயில் Semi High-Speed Railway இரயில்வே அமைப்பான மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பு; Regional Rapid Transit System மற்றும் உயர் போக்குவரத்து அமைப்பான Ropeway போன்ற அமைப்பை உருவாக்கி இரயில்வே வளர்ச்சி குறித்து சிந்தித்து செயலாற்றி நம்முடைய தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மக்கள் நலனுக்குப் புறம்பாக தலைநகரில் இருந்து எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கு சென்னை மாகாணம் வழி வழியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது!

செமி கண்டக்டர் துறையில் - கோவை செழுமை அடைந்திடும்!

தமிழ்நாடு அரசினுடைய இந்த நிதிநிலை அறிக்கை நடப்பு ஆண்டிற்கான வெறும் புள்ளிவிவரங்களை மட்டும், வரவு-செலவு குறித்த புள்ளி விவரங்களை மட்டும் கொண்டதாக அமையவில்லை. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், எங்களுக்கு வழிகாட்டியபடி எதிர்கால தமிழ்நாட்டினுடைய வளமான எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளம் அமைத்திடும் வகையில் உயரிய நோக்கங்களை உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Chip War என்கின்ற ஒரு நூல் கடந்த சில ஆண்டுகளாக உலகெங்கும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இதை எழுதியவர் Chris Miller என்பவர் ஆவார். Semiconductor துறையில் எந்த நாடு முதலிடம் வகிக்கிறதோ, அந்த நாடுதான் பொருளாதார வளர்ச்சியிலும் முதலிடம் வகிக்கும் என்று அவர் பல்வேறு தரப்பினரோடு கலந்து, ஆய்ந்து அதை நிரூபித்தும் இருக்கிறார். அவர்கள் கடந்த முறை உலக முதலீட்டாளர் மாநாட்டிற்கு இங்கே, சென்னைக்கும் நேரடியாக வருகை தந்து தன்னுடைய கருத்துகளை நம்மிடத்திலே பகிர்ந்து கொண்டு இருக்கிறார். இன்று உலகெங்கும் பல நாடுகளும் Semiconductor துறையில் போட்டிபோட்டுக் கொண்டு செயலாற்றி வருகின்றன. எனவே, அந்தத் துறையில் தமிழ்நாடும் முன்னிலைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து அவருடைய ஆலோசனைகளைப் பெற்று Semiconductor திட்டம் ஒன்றினை ஐந்தாண்டுத் திட்டமாக நம்முடைய அரசு இன்றைக்கு அறிவித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் இரண்டு Semiconductor தொழிற்பூங்காக்கள் கோவையிலே சூலூரிலும், பல்லடத்திலும் இன்றைக்கு நிறுவப்பட இருக்கின்றன. Semiconductor வளர்ச்சியில் கோவை மண்டலம் இன்னும் செழுமை அடைந்திடும் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம்.

அதுமட்டுமல்ல; புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கி இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் பலவும் தமிழ்நாட்டிற்கு இன்றைக்கு வந்திருக்கின்றன. Technical textiles, man-made fibers என்ற வகையில் இந்தியாவில் electronic பொருட்களை அதிக அளவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய மாநிலம் தமிழ்நாடு என்கின்ற பெருமையை நாம் பெற்று சிறந்து விளங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளர்ச்சி என்பது ஏதோ பெயருக்கு மட்டும் இல்லாமல், தொடர்ந்து எல்லா இடங்களிலும் முன்னேறி தமிழ்நாட்டில் பரவலான தொழில் பெருக்கத்தை இந்த அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. இந்த 2025-2026-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 80 ஆயிரம் நபர்களுக்குமேல் வேலை வாய்ப்பு வழங்கும் தொழிற்பூங்காக்கள் குறித்த அறிவிப்பு இந்த பட்ஜெட்டிலே இடம் பெற்றிருக்கிறது என்பதை நான் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

5 மடங்காக அதிகரித்த புத்தொழில் நிறுவனங்கள்!

அதைப்போன்று புத்தொழில் நிறுவனங்கள்; இந்த நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் கடந்த 2021 ஆம் ஆண்டு வரை நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்கக்கூடிய வரை, தமிழ்நாட்டிலே பதிவு செய்யப்பட்டு இருக்கக்கூடிய நிறுவனங்களின் எண்ணிக்கையை நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், அது வெறும் இரண்டாயிரத்து நூற்று ஐந்து தான். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் நம்முடைய தமிழ்நாடு அரசு எடுத்திருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகளின் காரணமாக இந்த எண்ணிக்கை இன்றைக்கு ஐந்து மடங்காக அதிகரித்து 10,649 புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய திருநாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இன்றைக்குத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழல்!

அதைப்போல சிறு, குறு தொழில்களைப் பொறுத்தமட்டில் இந்த அரசு பொறுப்பேற்கின்றபோது தமிழ்நாட்டில் 14.17 இலட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்து இயங்கிக் கொண்டிருந்தன. அதேவேளையில், கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் 17.92 இலட்சம் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது தமிழ்நாட்டில் 32.10 இலட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இது இத்தகைய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்குவதற்கு ஒரு உகந்த சூழ்நிலை நிலவி வருவதைக் காட்டுகிறது.

தொழிற்பேட்டைகள்

தமிழ்நாட்டில் கடந்த 2011-ஆம் ஆண்டிலிருந்து 2021-ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகால அ.தி.மு.க ஆட்சியில் SIPCOT நிறுவனத்தின் மூலமாக ஒன்பது தொழிற்பூங்காக்கள் சுமார் 1,800 ஏக்கர் பரப்பளவிலேதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளையில் இந்த கடந்த நான்கு ஆண்டுகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்பிறகு, 32 தொழிற்பூங்காக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 16,880 ஏக்கர் பரப்பளவிலே அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, இதே காலகட்டத்தில் SIDCO நிறுவனம் பத்து ஆண்டுகளிலே 1,111 ஏக்கர் பரப்பளவிலே 25 தொழிற்பேட்டைகளை நிறுவி இருக்கிறார்கள். ஆனால், 2021-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரையிலான இந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டும் 28 தொழிற்பேட்டைகள் 1,213 ஏக்கர் பரப்பளவிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் பெருமிதம் ஒருபுறம்; தொழில்நுட்பம் மறுபுறம்!

இது அண்மையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருப்பதைப்போல, கடந்த 2000-ஆம் ஆண்டிலே குமரி முனையில் வள்ளுவருக்கு வானுயர சிலை எழுப்பிய, அதே வருடம் ஜூலை மாதம், சென்னையில் TIDEL Park தொழில் பூங்காவை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். 'ததும்பும் தமிழ் பெருமிதம் ஒருபுறம், உலகை வெல்லும் நம்முடைய தொழில்நுட்பம் மறுபுறம்' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திட்டமிட்டு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், TIDEL Park மற்றும் Mini TIDEL Park இன்றைக்கு தொடங்கப்பட்டு வருகின்றன.

வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருப்பூர், சேலம், தூத்துக்குடி, மதுரை, ஓசூர் என தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து மற்ற இடங்களிலும் இதே போன்று தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், அந்தந்தப் பகுதிக்கு பெருமைக்குரிய அடையாளங்களாக மாறி, இளைஞர்களுக்கு பெரும் உத்வேகத்தை அளிக்கும் வழிகாட்டியாக மாற்றிடும் என்று நான் நம்புகிறேன்.

பள்ளிக் குழந்தைகளின் பசிபோக்கிடும் நமது முதல்வர்!

தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி என்கின்ற ஒரு நகரம் இருப்பதை நாம் அறிவோம். ஏழாம் நூற்றாண்டினுடைய காலகட்டத்தில் சிற்றூராக இருந்த சீர்காழியில் ஒரு காலைப்பொழுதில், அந்த ஊரில் இருக்கக்கூடிய சிவன் கோயிலினுடைய குளக்கரையில் ஒரு குழந்தை அழுதுக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை பசியால் கதறி அழுதபோது, அந்தக் குழந்தையினுடைய பசியை ஆற்றுவதற்கு, அதனுடைய அன்னை அருகில் இல்லை. அதனுடைய உற்றாரும், சுற்றாரும், உறவினரும் அருகில் இல்லை. ஆனால், அந்தக் குழந்தைத் தொடர்ந்து அழுதபோது, அந்தக் குழந்தையின் அழுக்குரல் அந்த ஊர் இறைவி அவர்களுடைய செவிகளில் விழுந்து பாலுக்காக, ஏங்கி வயிற்றுப் பசிக்காக அழக்கூடிய அந்தக் குழந்தையினுடைய பசியை ஆற்றுவதற்கு தாய்மை உணர்வோடு பார்வதியாக இருக்கக்கூடிய அந்த உமையம்மையே நேரடியாக வந்து, அந்தக் குழந்தைக்கு ஞானப் பாலினை ஊட்டி, அதனுடைய பசியைதணித்ததாக நான் புராணங்களிலே படித்து இருக்கிறேன். அப்படி உமையம்மையே ஞானப்பால் ஊட்டியதால்தான், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனாக அந்தக் குழந்தை உருவாயிற்று என்பதும், அதை ஒட்டி அந்தக் குழந்தை,

'தோடுடைய செவியன்
விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்'

என்று அழகிய தமிழிலே அந்தக் குழந்தை பாடியதாகவும் நான் படித்து இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தப் பேரரசாலும் தொட்டுப் பார்த்திட முடியாத தமிழ்நாடு!

வடக்கே இருந்து வரக்கூடிய எந்தவொரு ஆதிக்கத்திற்கும் தமிழ்நாடு வரலாற்றில் எந்த காலக் கட்டத்திலும் தலை வணங்கியதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மகா அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்தார். மகா அலெக்சாண்டருடைய வெற்றிப் பாதையில் தமிழ்நாடு ஒருபோதும் இருந்ததில்லை. மௌரியப் பேரரசர் சந்திரகுப்த மௌரியரால் தமிழ்நாட்டு எல்லையைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). அசோக சக்கரவர்த்தியினுடைய ஆட்சிச் சக்கரம் தமிழ் நிலப்பரப்பில் சுழலவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). குப்தர்களின் காலம் 'பொற்காலம்' என்று அழைக்கப்பட்டாலும் சமுத்திரகுப்தனுடைய காலடி இந்தத் தமிழ் மண்ணில் கடைசி வரை படியவில்லை. கனிஷ்கருடைய ஆட்சி எல்லைகள் என்பது விந்தியத்திற்கு தெற்கே ஒரு போதும் தாண்டியதில்லை. அக்பர் பாதுஷாவின் ராஜ்ஜியம் தமிழ்நாட்டை எட்ட முடியவில்லை. இந்துஸ்தானின் பாதுஷா என்று மட்டுமில்லாமல் நான் இந்த Universeக்கே நான் தான் ராஜா 'Emperor of the Universe' என்று தன்னை Alamgir என்று அழைத்துக் கொண்டாரே ஔரங்கசீப், அந்த ஔரங்கசீப்பினால் கூட தமிழ்நாட்டை வெல்ல முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஔரங்கசீப்பினாலேயே 'மலை எலி' என்று அழைக்கப்பட்டாரே மராட்டிய மண்ணின் சத்ரபதி சிவாஜி அவர்கள், அவரால்கூட தமிழ்நாட்டை ஆட்சி செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரலாறு தமிழ் மண்ணிற்கு மட்டுமே உரித்தான வரலாறு என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முன்னரே சொன்னதுபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊட்டிய அந்த தன்மான உணர்வின் வழியில் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், மானம் காக்கும் நாடு, எங்கள் தமிழ்நாடு!

நாட்டிற்கே வழிகாட்டி!

அன்றைக்கு ஒரு மழலையினுடைய அழுகுரலுக்கு உமையம்மை நேரடியாக இறைவியே வந்து பாலூட்டினாள். மலைமகள் அன்றைக்கு அந்தக் குழந்தைக்குப் பாலூட்டினாள். ஆனால் இன்றைக்கோ தமிழ்நாட்டிலே பள்ளிகளுக்கு செல்லக்கூடிய எந்தக் குழந்தையும் பசியிலே அழவே கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று தமிழ்நாட்டினுடைய தலைமகனாக, நம் உள்ளம் கவர் கள்வனாக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தை இன்றைக்கு நமக்கு அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அறிவுரைக்கிணங்க, நாடே போற்றும் வகையில் நடந்துகொண்டது மட்டுமின்றி, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்லாததையும் நாங்கள் செய்வோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுக்கே வழிகாட்டியாக மட்டுமின்றி உலக நாடுகளே இன்றைக்கு பின்பற்றும் வகையில் முதலமைச்சர் அவர்களுடைய காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

பசிப்பிணி நீக்கும் மருத்துவராக தமிழ்நாட்டு முதல்வர்!

1924-ஆம் ஆண்டு நீதிக் கட்சியினால் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியிலே தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், இன்றைக்கு இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெறத்தக்க அளவில், மதிய உணவுத் திட்டம், சத்துணவு அளிக்கும் திட்டங்களாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

நான் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்துக் கொண்டிருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த என்னுடைய அருமை நண்பர்களுக்கு நான் சொல்வேன், உங்கள் தேர்தல் அறிக்கையிலே இரண்டுமுறை இதே திட்டத்தை அறிவித்து, தேர்தல் வாக்குறுதியாக நாங்கள் இதைச் சொல்வோம், செய்வோம் என்று சொல்லி, ஒவ்வொரு முறையும் நீங்கள் இங்கே பேசுகிறபோது சொல்கிறீர்களே தேர்தல் வாக்குறுதி. நீங்கள் இரண்டுமுறை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து 10 ஆண்டு காலத்திலே உங்களால் நிறைவேற்ற முடியாத ஒன்றை தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி (மேசையைத் தட்டும் ஒலி) பசிப்பிணி நீக்கும் மருத்துவராக, நம்முடைய தாயுமானவராக இருந்து, இந்தத் தமிழ்நாட்டினுடைய குழந்தைகளுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி, ஒரு மாபெரும் சாதனையினை நிறைவேற்றித் தந்திருக்கிறார் என்பதை நான் இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வடக்கே இருந்து வரக்கூடிய எந்த ஒரு ஆதிக்கத்திற்கும் தமிழ்நாடு வரலாற்றில் எந்தக் காலகட்டத்திலும் தலை வணங்கியதில்லை!

மகளிர் உரிமைத் தொகை! நாடே வியந்து பாராட்டுகிறது!

சமூகத்தில் மகளிருடைய பங்கையும் முறையாக அங்கீகரிக்கக்கூடிய வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தினோம்.

இந்தத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியபோது, 'இந்தத் திட்டத்தை எப்படி இவர்கள் செயல்படுத்தப்போகிறார்கள்?' என்று பலர் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலரோ, இவர்கள், எங்கே, எப்போது இடறி விழுவார்கள்; steady ஆக இருக்கிறார்களே! இந்தத் திட்டத்தை தைரியமாகக் கொண்டு வந்திருக்கிறாரே முதலமைச்சர்! இதை நிறைவேற்ற முடியுமா? எந்தச் சமயத்தில் இவர்கள் இடறி விழுவார்கள்? என்கின்ற நப்பாசையோடும் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி, அவர்களுடைய இத்தகைய நயவஞ்சக எதிர்பார்ப்புகளையெல்லாம் தவிடு பொடியாக்கி, ஒரு கோடியே 15 இலட்சம் மகளிருக்கு மாதாமாதம் ஆயிரம் ரூபாய் தொடர்ந்து கிடைக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதை இந்த நாடே வியந்து பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

லண்டன் கல்லூரி பாராட்டு!

இன்னும் சொல்லவேண்டுமென்றால், ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதியன்று மகளிருக்கு வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கக்கூடிய அந்த நாள் தான், அந்தக் குடும்பத்திற்கே மகிழ்ச்சி தரக்கூடிய நாளாக ஆக்கியிருக்கிறது என்று லண்டன் King's கல்லூரியினுடைய ஆய்வுப் பேராசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மகளிர் உரிமைத் தொகையை எதற்காக அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று பார்த்தால், சேமிப்பாகவும், குழந்தைகளுடைய படிப்புச் செலவு, மருத்துவச் செலவு போன்ற அத்தியாவசியச் செலவினங்களுக்காகவும் இத்தொகையை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

மாதந்தோறும் மகளிர்க்கு முதல்வர் தரும் அன்புப்பரிசு!

மகளிர் உதவி பெறும் வகையில், ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்து, செயல்படுத்தி வருவது உலகளாவிய அளவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மாபெரும் பாராட்டுதலைப் பெற்றுத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தத் திட்டத்திற்காக விண்ணப்பிக்க மகளிரை எங்கும் அலைந்து திரிய வைக்காமல் இருப்பதற்காக அவர்களுடைய இல்லங்களுக்கு அருகிலேயே அவர்களுடைய விண்ணப்பங்களைப் பெற்று, பல்வேறு தரவுகளின் அடிப்படையில் அவற்றைச் சரி பார்த்து, அவர்களுடைய வங்கிக் கணக்கில் உரிமைத் தொகையானது வரவு வைக்கப்படுகிறது. இல்லம் தேடி வரும் மகளிர் உரிமைத் தொகை முதல்வரிடமிருந்து வரும் ஓர் அன்புப் பரிசாகவே ஒரு கோடிக்கும் மேலான மகளிர் பெரும் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதை யாரும் மறுத்து விட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதே வேளையில், நான் ஒன்றைச் சொல்வேன்; இதே போன்றதொரு திட்டத்தை இந்தியாவில் மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் செயல்படுத்தி வருகிறார்கள். அண்மையிலே சில நாளேடுகளில் வந்துள்ள செய்திகளின் அடிப்படையில் பார்ப்போம் என்று சொன்னால், மகாராஷ்டிரா மாநிலத்தில் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டத்தில்--அவர்கள் எதற்காக அறிவித்தார்கள்? மகாராஷ்டிரா மாநிலத்திலே தேர்தல் வருகிறது என்று அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு, தேர்தல் முடிந்தவுடன் ஜெயித்த கையோடு அம்மாநிலத்தில் அமைந்திருக்கக்கூடிய BJP அரசாங்கம் என்ன செய்தார்கள் தெரியுமா? சுமார் 15 இலட்சம் பயனாளிகளை அந்தத் திட்டப் பட்டியலிலிருந்து நீக்கியிருப்பதாக இன்றைக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. அதாவது, ஓர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஏற்றுக்கொண்டால், ஏற்றுக்கொண்ட காலத்தில் முதலிலே கையெழுத்து எதற்குப் போடவேண்டும்? விடியல் பயணத்திற்குக் கையெழுத்துப் போடலாம். தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, சத்துணவிலே முட்டையை அளிப்பதற்காக கையெழுத்துப் போட்டார்கள். இப்படி நாட்டு மக்களுக்காக நன்மை செய்யக்கூடிய திட்டங்களுக்குக் கையெழுத்துப் போடலாம். ஆனால், BJP அரசாங்கம் 15 இலட்சம் பேரை ஒரே அடியாக, ஒரே கையெழுத்திலே அந்தப் பட்டியலிலிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லவில்லை நண்பர்களே, நாட்டிலே வரக்கூடிய நல்லேடுகள் பல இன்றைக்கு தெரிவித்திருக்கின்றன.

தோழி மகளிர் விடுதி!

அப்படி, அவர்களை வெளியேற்றுவதன் காரணமாக மகாராஷ்டிரா மாநிலத்தினுடைய வருவாய்ப் பற்றாக்குறையை அவர்கள் ரூ.46,000 கோடியாகக் குறைத்திருக்கிறோம் என்று இதிலே பெருமை வேறு கொள்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே மகளிர் உரிமைத் தொகை மட்டுமல்ல; கலைஞர் கனவு இல்லம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், விடியல் பயணம் என பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தியதற்குப் பிறகும்கூட, நாம் இன்றைக்கு வருவாய்ப் பற்றாக்குறையை ரூ.68,000 கோடியிலிருந்து ரூ.41,000 கோடியாகக் குறைத்திருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால், அது நமது முதலமைச்சர் அவர்கள் நிதி மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு நல்ல சான்றாக இருக்கும்.

அதைப்போல மகளிருக்காகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய 'தோழி' மகளிர் விடுதிகள், தொழிற்சாலைகளில் கட்டப்படக்கூடிய தங்கும் விடுதிகள் ஆகிய திட்டங்கள் இன்றைக்கு தேசிய அளவிலே கவனம் பெற்றது மட்டுமல்ல; ஒன்றிய அரசு சமீபத்திலே வெளியிட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையிலும்கூட அவை இடம்பெற்று இந்தத் திட்டங்கள் பாராட்டப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

நாட்டில் தேசிய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில், தமிழ்நாட்டில் 42 சதவிகித பெண்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய ஒரு செய்தி. (மேசையைத் தட்டும் ஒலி).

20-11--2021 வரையிலான பத்து ஆண்டுகளில் 29 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், ITI-க்கள் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிறுவப்பட்டிருக்கின்றன. அதே வேளையில், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், நம்முடைய திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் 42 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, அதிநவீன தொழில்நுட்ப 4.0 technology அடிப்படையில் தமிழ்நாடு எங்கும் உள்ள 71 அரசினர் தொழிற்பயிற்சி நிறுவனங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ITI-க்கள் இன்றைக்கு தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் பெருமையோடு இங்கே சொல்வேன்.

ஒன்றிய அரசு NEET, CUET போன்றிருக்கக்கூடிய, பள்ளி மாணவர்களை தொடர்ந்து சிக்கல்களுக்கு உள்ளாக்கக்கூடிய, நவீன குலக் கல்வி திட்டத்தை இன்றைக்கு நம்மீது திணித்துக் கொண்டிருக்கிறது. அதனால் கிரமப்புறங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த முதல் தலைமுறை மாணவர்கள் உயர் கல்வி கற்பது தடைபடும் என்று பல ஆண்டுகளாக தமிழ்நாடு குரல் கொடுத்து வருகிறது. இருந்தாலும்கூட ஒன்றிய அரசு அதற்கு செவி சாய்க்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

ஆனால், அதற்கு மாற்றாக இந்தியாவிலேயே அதிக அளவில் உயர் கல்வி சேர்க்கை மிகுந்த மாநிலமாகத் திகழ்ந்திடும் நம் தமிழ்நாட்டின் சாதனைத் திட்டங்களாக, நான்கு இலட்சம் பேர் பயன்பெறும் புதுமைப் பெண் திட்டம் மற்றும் 3.8 இலட்சம் பேர் பயன்பெறும் தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்கள் முதலமைச்சர் அவர்களால் சீரிய முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு எங்கும் ஒவ்வொரு ஆண்டும் புதிய கல்லூரிகள், அனைத்துக் கல்லூரிகளிலும் Artificial Intelligence, Data Analysis போன்ற நவீன படிப்புகள், உயர் கல்வியை சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதை தாரக மந்திரமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு இயங்கி வருகிறது.

ஒன்றிய அரசினுடைய நவீன குலக் கல்வி திட்டத்தை, ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிற இந்த வேளையில், தமிழ்நாடு எல்லோருக்கும் எல்லாம் என்கிற முழக்கத்தை முன் வைத்து, தமிழ்நாட்டை வெற்றிப் பாதையிலே முன்னேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மதுரை - கலைஞர் நூலகம் 14 லட்சம் பேர் வருகை!

நாளேடுகளில் நாம் பார்த்தோம், உத்தரபிரதேசத்திலே கும்பமேளா வந்தது. கும்பமேளாவிற்காக கோடிக்கணக்கான மக்கள் அங்கே வந்தார்கள், இலட்சக்கணக்கான மக்கள் அங்கே திரண்டிருக்கிறார்கள் என்று அங்கே இருக்கக்கூடியவர்கள் பெருமைப்பட்டுக்கொள்வது வாடிக்கை. ஆனால், அறிவு சார்ந்த தமிழ்ச் சமூகத்தின் தனிப்பெரும் அடையாளமாக விளங்கக் கூடிய மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு, இதுவரையில் 14 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் வருகைபுரிந்திருக்கிறார்கள் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய எங்களுக்குப் பெருமை. அதுமாத்திரம் அல்ல, அதற்கு அருகே அமைந்திருக்கக்கூடிய கீழடி அருங்காட்சியகத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தந்திருக்கிறார்கள் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை என்று நான் சொல்வேன். அது எங்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமை என்பதைத் தாண்டி ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும் கிடைத்திருக்கக்கூடிய மாபெரும் பெருமையாக நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒவ்வொரு ஆண்டும் இந்தி மொழியையும், வட மொழியையும் வளர்த்திட பல நூறு கோடி ரூபாய்களை ஒன்றிய அரசு ஒதுக்கி வருகிறது. ஆனால், உயர்தனிச் செம்மொழி என்று அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழியைப் பாதுகாத்து வளர்த்திட மிக மிக குறைவான ஒரு தொகையைத் தான் ஒன்றிய அரசு ஒதுக்கி வருகிறது. ஆனால், அது குறித்தெல்லாம் நாங்கள் கவலைப்படாமல், தமிழ் மொழியை வளர்த்திட மட்டுமன்றி, தமிழ்மொழியின் சிறப்பை உலகெங்கும் கொண்டு செல்ல எவ்வளவு நிதியையும் ஒதுக்கி, பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இந்த மன்றத்திலே திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வான்புகழ் வள்ளுவத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் உயரிய நோக்கத்துடன் ஐ.நா. நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய 193 நாடுகளிலுள்ள அனைத்து மொழிகளிலும் நம்முடைய குறள் மொழிபெயர்க்கப்படுவது மட்டுமன்றி, ஐந்தாண்டுகளில், அனைத்து தலைசிறந்த மொழிகளிலும், பல்வேறு உலக மொழிகளிலும் தமிழ் இலக்கியங்களை எடுத்துச் செல்லவும், தமிழர்கள் அதிகமாக வசிக்கும் முக்கிய நாடுகள் மட்டுமன்றி, பல உலக நாடுகளில் தமிழ் புத்தகக் கண்காட்சிகள் நடத்தவும் இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்தியாவிலே புரையோடிச் சென்றிருக்கிற சாதிப் பாகுபாட்டை மென்மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு முற்றாக நிராகரிக்கும் என்கிற நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குமாறாக அவரவர் விருப்பப்பட்ட கைவினைப் பொருட்களை உருவாக்குவதற்காகவும், நவீன முறையில் செயலாற்றுவதற்காகவும் கலைஞர் கைவினைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் 7,297 நபர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு, 28 கோடி ரூபாய் மானியத்தோடு 138 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் விரைவில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்